# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 19 /2017**

திருமதி. எப்சிபா கமலம் யோசுவா,
11/2, பெரியார் நகர் EB எதிரில்,
சென்னீர்குப்பம்,
பூவிருந்தவல்லி – அஞ்சல்,
சென்னை–600 056.

. . . மேல்முறையீட்டாளர்
(திரு. காலப் யோசுவா)

எதிர்

உதவி பொறியாளர்/பகிர்மானம்,
நகர்/ஸ்ரீ வைகுண்டம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
புதுக்குடி ஸ்ரீ வைகுண்டம்.

. . . எதிர்மனுதாரர்
(திரு. முஜீப் ரஹ்மான், உதவி பொறியாளர்/ஸ்ரீவைகுண்டம்)

**கேட்புரை நாள் : 5–5–2017**

**ஆணை நாள் : 01.08.2017**

திருமதி. எப்சிபா கமலம் யோசுவா அவர்களின் 23.2.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.19/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 5.5.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

(i) குறைதீர்க்கும் மன்றத்தின் நடவடிக்கைகள் உத்தரவுகள் எண்கள் 071 நாள் 21.1.2016 மற்றும் 122 நாள் 31.3.2017 ரத்து செய்யப்படவேண்டும்.

(ii) மின்இணைப்பு எண்.390–006–1420 இன் விகிதப்பட்டி IAக்கு 13.8.2015 முதல் அதாவது அலுவலகம் காலியான மறு நாள் முதல் மாற்றப்பட்டு இருக்க வேண்டும் எனவே, 13.8.2015 முதல் இதுவரை IA மின்கட்டணத்திற்கு மேல் அதிகமாக அவரிடம் வசூலித்த கட்டணம் கணக்கிடப்பட்டு அவருக்கு திரும்ப வழங்கப்பட வேண்டும்

(iii) விகிதப்பட்டி IA க்கு 100 யுனிட் இலவசமாக அறிவிக்கப்பட்டு அமலுக்கு வந்த நாள் முதல் அவர் மின்கட்டணம் செலுத்த தேவையில்லை. அவரிடமிருந்து வலுக்கட்டாயமாக IIBஐ யின் (V என்பதற்கு பதில் தவறாக IIB என்று தெரிவிக்கப்பட்டுள்ளது) கீழ் அதிகமாக பெறப்பட்ட தொகை திரும்ப கொடுக்கப்படவேண்டும்.

(iv) திருவைகுண்டத்தில் அவரது வீடு பலமாதங்களாக உதவி பொறியாளரின் தவறான பாரபட்சமான நடவடிக்கையினால் இருளில் மூழ்கி கிடப்பதால் அவர் அங்கு சென்று குடியேற முடியவில்லை. யாருக்கும் வாடகைக்கு கொடுக்கவும் முடியவில்லை. இதனால் பிரதிமாதம் ரூ.12000/– நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. ஆக 13.8.2015 முதல் பிரதிமாதம் நஷ்டஈடாக மின்வாரியம் அல்லது உதவி செயற்பொறியாளர் மாதம் ரூ.12000/– வீதம் இந்த மேல்முறையீடு முடியும் வரை கொடுக்கவேண்டும்.

(v) 13.8.2015 முதல் இன்றைய நாள்வரை அவரும் அவரின் கணவரும் சந்தித்து வரும் அனைத்து கொடுமைகளுக்கும் வீட்டு பராமரிப்புக்காக சேர்த்து வைக்கப்பட்ட பொருட்கள் காணாமல் போய் வருவதால் உண்டாகும் பொருளாதார நஷ்டங்களுக்கும் மன உளைச்சலுக்காகவும் சரீர பாதிப்புகளுக்காகவும் மின்வாரியம் அல்லது உதவி பொறியாளர் பொறுப்பேற்று நஷ்ட ஈடாக ரூ.2,00,000/– கொடுக்க உத்தரவிடும்படி பிரார்த்திக்கின்றார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் வீட்டின் மாடிபகுதியில் மின்இணைப்பு எண்.390–006–1420 உள்ளது. மேற்கண்ட பகுதி அரசு கல்வித்துறை உதவி தொடக்கக்கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டதால் விகிதப்பட்டி (tariff) Vல் மின்கட்டணம் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

2.2 உதவி தொடக்க கல்வி அலுவலரின் அலுவலகம், மேற்கண்ட மாடிப்பகுதியை 10.7.2015 காலி செய்துள்ளார்கள். 17.8.2015 அன்று உதவி பொறியாளர்/விநியோகம் நகர் திருவைகுண்டம் அவர்களுக்கு மேற்கண்ட மின்இணைப்பின் விகிதப்பட்டியை IAக்கு மாற்றி தரும்படி விண்ணப்பம் செய்துள்ளார்.

2.3 மின்இணைப்பு எண்.390–006–1420 மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.B 900ல் உள்ள நிலுவைத்தொகையையும் செலுத்தினால்தான் மறு மின்இணைப்பு மற்றும் மின்கட்டண விகிதப்பட்டி மாற்றம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.4 மேல்முறையீட்டாளர் இது சம்பந்தமாக தூத்துக்குடி மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 21.1.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் மன்றம் மின்கட்டணம் செலுத்தாததால் மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மறு மின்இணைப்பு பெற வாரிய விதிகளின்படி அதற்குரிய மின்கட்டண நிலுவைத்தொகையை செலுத்துமாறு உத்தரவு இட்டுள்ளது.

2.5 மேல்முறையீட்டாளர் 9.2.2016 அன்று ரூ.1662/– செலுத்தி மறு மின்இணைப்பு பெற்றுள்ளார்.

2.6 உதவி பொறியாளர் மின்இணைப்பின் விகித பட்டியல் மாற்றம் செய்ய முறையான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்று 6.10.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2.7 மேல்முறையீட்டாளர் விகிதப்பட்டி மாற்றம் கோரி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 27.11.2016 அன்று மனு செய்துள்ளார். மன்றம் 31.1.2017 நாளிட்ட ஆணையில்அதன் தீர்வை அளித்துள்ளது. மன்றத்தின் மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 31.1.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“<u>மன்றத்தின் முடிவு</u>*
*மனுதாரர் மற்றும் உரிமம்தாரர் பதிலையும் ஆய்வு செய்யும்போது மனுதாரர் விகிதப்பட்டி மாற்றத்திற்குரிய முறையான விண்ணப்பம் மற்றும் அதற்குரிய கட்டணம் செலுத்தியதின் அடிப்படையில் 27.10.2016 முதல் விகிதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டது தெரியவருகிறது. மேலும், 11/2016 மாதத்திற்குரிய மின்கட்டணம் செலுத்தாத காரணத்தால் மின்இணைப்பு 9.12.2016 முதல் மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கோரிய விகிதப்பட்டி மாற்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதால் மனுதாரர் நிலுவைத்தொகையை செலுத்தி மறு மின்இணைப்பு பெற்றுக் கொள்ள இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைக்கிறது .”*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 திருவைகுண்டத்தில் எனது குடியிருப்பு வீட்டின் மாடிபகுதியில் குறைந்த மின்அழுத்த ஒரு முனை மின்இணைப்பு 390–006–1420 உள்ளது. நான் எனது குடும்பத்துடன் சென்னை வந்துவிட்டதால் வீட்டின் இந்த மாடி பகுதியை அரசு கல்வித்துறை, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலத்திற்கு மாத வாடகைக்கென கொடுத்தேன். மின்இணைப்பு திறனிலோ அதன் தன்மையிலோ எந்தவிதமான மாற்றம் இன்றி மின்விகிதப்பட்டி மட்டும் IA யிலிருந்து Vக்கு மாற்றப்பட்டு அலுவலகம் என் பெயரில் மின்கட்டணத்தை செலுத்தி வந்தது.

4.2 என் சொந்த வீட்டிலே குடியேற நினைத்து கல்வித்துறையிடம் தங்களது அலுவலகத்தை எனது சுய உபயோகத்திற்காக காலி செய்து கொடுக்கும்படி கேட்டேன். அதன் நிமித்தமாக அலுவலகம் 10.7.2015ல் காலி செய்யப்பட்டது. 12.8.2015ல் மின்உபயோக கணக்கீடு செய்யப்பட்டு அலுவலகம் தாங்கள் கட்டவேண்டிய நிலுவைத்தொகை ரூ.1598/– செலுத்தி தங்கள் கணக்கை முடித்தார்கள். பணம் கட்டியதற்கான ரசீது எண்.9175715 நாள் 12.8.2015

4.3 இந்நிலையில் நான் 17.8.2015 அன்று மின்சார வாரிய உதவி பொறியாளர்/விநியோகம்/நகருக்கு கடிதம் எழுதி அரசு அலுவலகம் எனது குடியிருப்பு வீட்டிலிருந்து காலியாகிவிட்டதால் என் மின்இணைப்பு விகிதப்பட்டியை மீண்டும் குடும்ப உபயோகத்திற்கு Vலிருந்து IAக்கு மாற்றும்படி கேட்டுக் கொண்டேன். அரசு அலுவகம் 12.8.2015 வரை தாங்கள் உபயோகித்த மின்சாரத்தை கணக்கீடு செய்து நிரந்தரமாக தங்கள் கணக்கை முடித்துவிட்டதால் நான் 13.8.2015 முதல் விகிதப்பட்டி 1Aக்கு மாற்றக் கேட்டுக் கொண்டேன். இந்த கடிதத்துடன் அரசு அலுவலகம் காலிசெய்யப்பட்டது குறித்து அவர்களது கடிதம் நாள் 7.8.2015 நகல் அவர்கள் மின்கட்டணம் கட்டிய ரசீது 91757515ன் நகல் மற்றும் விகிதப்பட்டி மாற்றத்திற்கான எனது கடிதம் நாள் 17.8.2015 ஆகிய மூன்று ஆவணங்களையும் இணைத்தேன்.

4.4 உதவி பொறியாளர் எனது 17.8.15 கடிதத்தை 20.8.15 அன்று பெற்றுக்கொண்டதாக அவரது ஒப்புகை அட்டை கூறுகிறது. இதை மன்ற நடவடிக்கை உத்தரவு எண்.122 நாள் 31.1.2017ல் இரண்டாவது பக்கத்தில் உதவி பொறியாளர் தனது உரிமம்தாரர் பதிலில் உறுதிப்படுத்துகிறார் இதிலிருந்து எனது விகிதப்பட்டி எண். மாற்றம் கேட்ட விண்ணப்பத்தை உதவி பொறியாளர் 20.8.15 அன்று பெற்றுக் கொண்டதை உறுதிபடுத்துகிறது.

4.5 எனது கணவர் திருவைகுண்டம் 12.8.15 அன்று சென்றார். உதவி பொறியாளர் அலுவலகத்தில் இல்லை. 13.8.15 அன்று அவரை அலுவலகத்தில் சந்தித்தபோது எனது கணவர் திரு. காலேப்

யோசுவா சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு SSI Tiny sector ஒரு தொழில் மும்முனை இணைப்பு எண்.B900ல் நடத்தி வந்ததாகவும் அதில் மின்கட்டணம் நிலுவைத்தொகையில் உள்ளதாகவும் அதை அவர் கட்டினால்தான் எனது விகிதப்பட்டி மாற்றம் மறு மின்இணைப்பு என் இல்லத்திற்கு கொடுக்கப்படும் என்று கூறினார். எனது குடியிருப்பு வீடு பலமாதங்களாக இருளடைந்து கிடப்பதால் வீட்டுக்கு கட்டவேண்டிய நிலுவைத்தொகையை பெற்றுக்கொண்டு மறு மின்இணைப்பு உடனே கொடுக்க என் கணவர் கேட்டுக் கொண்டார். ஆனால், உதவி பொறியாளரோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

4.6 உதவி பொறியாளர் அவரது இந்த வாய்மொழியை பின் 10.1.2017ல் நடந்த குறைதீர்மன்ற நடவடிக்கையின்போது தனது உரிமம்தார் பதிலில் உறுதிபடுத்துகிறார். மனுதார் 17.8.15 அன்று விகிதப்பட்டி மாற்றம் செய்ய கடிதம் கொடுத்துள்ளார்கள் ஏற்கெனவே மனுதாரரின் கணவர் பெயரில் மின்கட்டண தொகை நிலுவை இருந்த காரணத்தினாலும் நிலுவைத்தொகையை செலுத்தாத காரணத்தினாலும் விகிதப்பட்டி மாற்றம் செய்யப்படவில்லை. இதிலிருந்து உதவி பொறியாளர் என் கணவரின் B900 மின்இணைப்பில் உள்ளதாகக் கூறும் நிலுவைத்தொகையை கட்டாததினால் என் வீட்டு மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு மேலும் விகிதப்பட்டி மாற்றம் செய்யப்படவில்லை என்பதை உறுதிபடுத்துகிறார்.

4.7 இந்த B900 நிலுவைத்தொகை பிரச்சனையில் எனது கணவர் தமிழ்நாடு மின்சார வாரிய சேர்மன், செயற்பொறியாளர்/ஊரகம்/தூத்துக்குடி மற்றும் இளநிலை பொறியாளர்/ விநியோகம் / திருவைகுண்டம் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் WMP12028 மற்றும் 12030 of 2001 in WPs S8467 & 8468 of 2001ல் வழக்கு தொடர்ந்த விவரத்தையும் நீதிபதி பி. சண்முகம் அவர்களால் வெள்ளிக்கிழமை 15ம் நாள் ஜுன் 2001 இந்த நிலுவைத்தொகை கோரிக்கைக்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட்டதையும் எடுத்துக்கூறினார். இந்த உத்தரவு

நகல் மேற்கூறிய மூன்று அதிகாரிகளுக்கும் உயர்நீதிமன்றம் மூலமாக அனுப்பப்பட்டதை நீதிமன்ற உத்தரவிலே காணலாம். மேலும், உதவி பொறியாளருக்கு 21.6.2001 அன்று மாலை 16.20 க்கு நகல் நேரில் கொடுக்கப்பட்டு அவரது கையொப்பம் பெறப்பட்டது. உயர்நீதிமன்ற இடைக்காலத்தடை உத்தரவை மின்வாரியம் ஏற்றுக்கொண்டதினால் தடையை நீக்க எந்தவிதமான முயற்சியும் நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. ஆதலால் அது இப்பொழுது ஒரு முடிவுப்பெற்ற நீதிமன்ற வழக்கு ஆகும்.

4.8 உதவி பொறியாளரது நடவடிக்கை முறையானது அல்ல ஏனென்றால் உதவி பொறியாளர் எழுப்பிய நிலுவைத்தொகை எனது கணவரது முடிந்துப்போன சிறுதொழில் மின்இணைப்பு B900 சம்பந்தப்பட்டது. ஆனல், அவர் துண்டித்தது என் பெயரில் உள்ள எனது வீட்டு உபயோக மின்இணைப்பு 390–006–1420 மற்றும் அதன் விகிதப்பட்டி எண் மாற்றம் ஆக முடிந்துபோன என் கணவரது சிறுதொழில் இணைப்பில் நிலுவைத்தொகை உள்ளது என தவறாக கூறி என்னுடைய வீட்டு மின்இணைப்பை துண்டித்து பின் அதற்கு மறு மின்இணைப்பு கொடுக்க மறுப்பது மற்றும் விகிதப்பட்டி எண்ணை மாற்ற மறுப்பது மேலும் இந்த இரண்டு மின்இணைப்புகளையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்துவது எந்த வகையிலும் வழியிலும் நியாயம் அல்ல. B900 எனது கணவரது 15 ஆண்டுகளுக்கு முன்பே முடிந்தபோன மின்இணைப்பின் சம்பவம் ஆனால் 390–006–1420 எனது குடியிருப்பு வீட்டு உபயோக மின்இணைப்பு ஒருவரது கடந்துபோன மும்முனை மின்இணைப்பை இப்பொழுது நிலுவையில் உள்ள மற்றொருவரது வீட்டு மின்இணைப்போடு சம்பந்தப்படுத்தி மின்இணைப்பை துண்டிப்பது எவ்விதத்திலும் இயற்கையான நியதியல்ல என்று உதவி பொறியாளருக்கு மிகத்தெளிவாக எடுத்துக்கூறியும் அவர் தன்போக்கிலே உறுதியாக இருந்தார்.

4.9 B900 நிலுவைக்கணக்கு 4.7.15ல் நிரந்தரமாக முடிக்கப்பட்டது என்பதை உதவி பொறியாளரே கூறுகிறார் ''கணக்கு முடிக்கப்பட்டு தொகைப்போக மீதி செலுத்தவேண்டிய தொகை

ரூ.11079/– ஆகும். மேற்படி தொகையை செலுத்தக்கூறி 14.3.2005ல் கடிதம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.'' என்கிறார் இந்த ஒப்புதல் குறித்து என் கணவர் மன்ற நாள் 4.1.2016 அன்றே கேள்வி ஏழுப்பினார். இந்த ஒப்புதல் கடிதத்தில் எனது கணவரது கையெழுத்து இல்லை. மாறாக அவருக்காக யாரோ ஒருவர் கையெழுத்திட்டிருந்ததாக தெரியவந்தது. ஆதலால் மன்ற நடவடிக்கை நாள் அன்றே எனது கணவர் தனது ஒப்புதல் என்பதை மறுத்தார். இப்பொழுது கணக்கு நிரந்தரமாக 4.7.2005 அன்று முடிக்கப்பட்ட பின் மீதி செலுத்தவேண்டிய தொகை 14.3.2015 அன்று எங்கிருந்து உதயமானது. அதாவது 14.3.2015ல் எழுந்த நிலுவைத்தொகை 4.7.2005ல் கட்டப்பட்டு கணக்கு முடித்து வைக்கப்பட்டது என்பதுதானே சரியான பொருள்

4.10 390–006–1420ல் மின்கட்டணம் செலுத்தாததால் மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மறு மின்இணைப்பு பெற வாரிய விதிகளின்படி அதற்குரிய மின்கட்டண நிலுவைத்தொகையை செலுத்தி பின்னர் மறு மின்இணைப்பு பெற்றுக்கொள்ளுமாறு இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைக்கிறது.

4.11 இந்த தீர்ப்பு முற்றிலுமாக ஒருதலைபட்சமானது பாரபட்சமானது இயற்கை நியதிக்கு அப்பாற்பட்டது. ஏனென்றால் எனக்கு எந்தவிதமான அத்தியாவசியமான அறிவிப்பு நோட்டீஸ் இல்லாமல் எனது மின்இணைப்பு துண்டிக்கப்பட்டது. விகிதப்பட்டி எண்ணும் நீண்டகாலமாக மாற்றப்படவில்லை. 390–006–1420 மின்கட்டணத்தை நான் 13.8.15 அன்று செலுத்த முன்வந்தும் அதை வாங்க மறுத்து B900 கணக்கை முதலில் முடித்து விட்டு வா என்றார்கள் இப்பொழுது 390–006–1420ன் மின்கட்டணத்தை நான் ஏற்றவேளையில் செலுத்தவில்லை என்பது எந்த வகையில் நியாயம்? 13.8.2015 அன்று நிலுவைத்தொகையை கட்டச்சென்றபொழுது உதவி பொறியாளர் தன் தவறான சிந்தனையினால் தவறான முடிவெடுத்து வாங்க மறுத்தார்கள். இப்பொழுது மன்றம் 21.1.2016ல் நான்

நிலுவைத்தொகையை கட்ட தவறிவிட்டேன் ஆதலால் நிலுவைத்தொகையை அபராதத்தொகையுடன் கட்டு என்பது எந்த வகையிலும் நியாயத்திற்கு உட்பட்டது அல்ல. மாறாக அது அதிகார துஷ்பிரயோகம் ஆகும்.

4.12 வேறு வழியின்றி கேட்ட நிலுவைத்தொகையை செலுத்தி மறு மின்இணைப்பு பெற்றேன். மின்கட்டண ரசீது எண்கள் 9987269/9.2.2016 ரூ.1329/– மற்றும் 9887268/9.2.2016 ரூ.333/– ஆக மொத்தம் 1662/– செலுத்தி மின் இணைப்பு பெற்றேன்.

4.13 என் விகிதப்பட்டி எண்ணை மாற்ற மறுத்தார் உதவி பொறியாளர் எனக்கு D.No.364 நாள் 6.10.2016ல் ஒரு கடிதம் எழுதி அதாவது சுமார் 14 மாதங்களுக்குப்பின் நான் 17.8.2015ல் கொடுத்த விண்ணப்பம் முறையான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்றார்.

4.14 மன்ற நடவடிக்கை உத்தரவு எண்.122 நாள் 31.1.2017மனுதாரர் விகிதப்பட்டி மாற்றத்திற்குரிய முறையான விண்ணப்பம் 18.10.2016ல் அனுப்பி வைத்தாலும் அதற்குரிய கட்டணத்தை செலுத்தியதாலும் 27.10.2016 முதல் விகிதப்பட்டிமாற்றம் செய்யப்பட்டது என கூறுகிறது. இது ஒரு பாதகமான தீர்ப்பு உதவி பொறியாளருக்கு சாதகமான ஒரு தீர்ப்பு 18.10.2016ல் நான் எந்தவிதமான முறையான விண்ணப்பம் என்று ஒன்றை உதவி பொறியாளருக்கு அனுப்பவே இல்லை. இது ஒரு அபத்தமான பொய்யாகும். நான் எழுதியதாக கூறப்படும் 18.10.2016 கடித நகல் ஒன்றை எனக்கு அனுப்பி தரும்படி உதவி பொறியாளருக்கு 7.2.2017 அன்று கடிதம் எழுதினேன். இதுவரை அவரிடம் இருந்து பதில் எதுவும் இல்லை.

4.15 மேலும், மன்றம் நான் 11/2016 மாதத்திற்குரிய மின்கட்டணம் செலுத்தாத காரணத்தினால் மின்இணைப்பு 9.12.2016 முதல் மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் நிலுவைத்தொகையை செலுத்தி மறுமின்இணைப்பு பெற்றுக்கொள்ள இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைத்தது எனக்கூறுகிறது இதுவும் தவறான தீர்ப்பு

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்இணைப்புக்குரிய கட்டிடத்தில் அரசு தொடக்க கல்வி அலுவலகம் இயங்கி வந்ததால் மின் இணைப்பு எண்.390–006–1420 வீதப்பட்டி எண்.5ல் கணக்கீடு செய்யப்பட்டு வந்தது.

5.2 மனுதாரர் குறிப்பிட்டுள்ள தொகை வீதப்பட்டி எண்.5ல் இயங்கி வந்த மின்இணைப்பு எண்.390–006–1420க்கு செலுத்த வேண்டிய தொகை ஆகும்.

5.3 மனுதாரர் மின்இணைப்பு எண்.390–006–1420க்கு வீதப்பட்டி மாற்றம் வேண்டி விண்ணப்பம் அளித்த காலகட்டத்தில் மேற்படி மின் நுகர்வோரான திருமதி. ஹெப்சிபா கமலம் யோசுவா அவர்களின் கணவர் பெயரில் இருந்த மின்இணைப்பு எண்.390–006–900க்கு உண்டான நிலுவைத்தொகை இருந்த காரணத்தால் வீதப்பட்டி மாற்றம் செய்யவில்லை. இது குறித்து 31.1.2017 அன்று நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலும் உரிமம்தாரர் தரப்பில் கூறியுள்ளேன். மேலும், வீதப்பட்டி மாற்றம் மற்றும் மின்துண்டிப்பு குறித்து மனுதாரர் ஏற்கனவே 21.1.2016ல் நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கூறியுள்ளார். மேற்படி மனுதாரர் குறைதீர்ப்பு மன்ற உத்தரவினை ஏற்று மின்இணைப்பு எண்.390–006–1420க்கு மறு மின்இணைப்பு வேண்டி மனுதாரர் கோரியதன் பெயரில் உரிய தொகைகள் வசூல் செய்யப்பட்டு மறு மின்இணைப்பும் வழங்கப்பட்டுவிட்டது.

5.4 மனுதாரரின் கணவர் திரு. காலேப் யோசுவா அவர்கள் என்னை அலுவலகத்தில் வைத்து சந்திக்கவே இல்லை. மேலும், திரு. காலேப் யோசுவா அவர்களை நுகர்வேர் குறைதீர்க்கும் மன்றம் நடைபெற்ற நாளான 31.1.2017 அன்றுதான் சந்தித்தேன்.

5.5 மனுதாரர் வீதப்பட்டி மாற்றம் வேண்டிய விண்ணப்பம் மனுதாரரின் கணவர் பெயர் உள்ள நிலுவைத்தொகையினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என நுகர்வோர் குறைதீர்க்கும்

மன்றத்திலும் கூறியுள்ளேன். மேலும், மின்இணைப்பு எண்.390–006–1420க்கு உரிய மின்கட்டண தொகை செலுத்தாத காரணத்தினால் தான் மின்துண்டிப்பு செய்யப்பட்டது.

5.6 மனுதாரர் மின்இணைப்பு எண்.390–006–900க்கு உரிய நிலுவைத்தொகையினை தள்ளுபடி செய்ய வேண்டி கேட்டுக் கொண்டதன் பேரிலேயே உயர்நீதிமன்ற உத்தரவு மனுதாரரிடம் கோரப்பட்டது.

5.7 மனுதாரர் மின்இணைப்பு எண்.390–006–1420 மின்இணைப்பு உரிய மின்கட்டண தொகை செலுத்தாததினால் தான் மின்துண்டிப்பு செய்யப்பட்டது. 390–006–900 நிலுவைத்தொகை வசூல் செய்யும் பொருட்டு வீதப்பட்டி மாற்றம் மற்றும் மறு மின்இணைப்பு செயல்படுத்தப்படவில்லை.

5.8 மின்இணைப்பு எண்.390.006–900க்கு நிரந்தர கணக்கு முடிக்கப்பட்ட பின் நிலுவைத்தொகையான ரூ.11079/–ஐ செலுத்த வேண்டிய வாரியத்தரப்பில் இருந்து கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தாங்கள் செலுத்த வேண்டிய தொகைகள் குறித்து இன வாரியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதும் இவ்வலுவலக கோப்புகளை ஆய்வு செய்ததில் தெரிய வருகிறது.

5.9 மின்இணைப்பு எண்.390–006–900க்கு மனுதாரர் 4.7.2005ல் கட்டியுள்ள தொகையினை தவிர்த்து கணக்கு முடிக்கப்பட்ட நாளில் மனுதாரர் கட்டவேண்டிய தொகையாக ரூ.11079/– என கணக்கீடு செய்து மனுதாரருக்கு 14.3.2005ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

5.10 மின் நுகர்வோர் தங்களின் மின்இணைப்பினை வாரிய பணியாளரால் அளவீடு செய்யப்பட்ட நாளில் இருந்து 20 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்பது வாரிய விதி ஆகும். அவ்வாறு 20 நாட்களுக்குள் பணம் செலுத்தாவிடில் மறுநாளே மின்துண்டிப்பு செய்யப்படவேண்டும் என்பதும் வாரிய விதியாகும். ஆகவே நுகர்வோர்கள் தான் தங்களின் மின்கட்டணத்தை உரிய கால கெடுவிற்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடில் எவ்வித முன்

அறிவிப்பும் இன்றி மின்இணைப்பும் துண்டிக்கப்பட வேண்டும் என்பதும் வாரிய விதிமுறையாகும்.

5.11 மனுதாரர் கணவர் திரு. காலேப் யோசுவா மின்இணைப்பு 390–006–1420 வீதப்பட்டி மாற்றம் செய்ய வேண்டிய எழுதிய கடிதத்துடன் மனுதாரரின் கடிதம் 29.7.2016 இணைத்து அனுப்பியிருந்தார். மேலும், மனுதாரரின் கணவர் திரு. காலேப் யோசுவா அவர்கள் மீண்டும் கடந்த 14.10.2016ம் நாளிட்ட கடிதத்தில் வீதப்பட்டி மாற்றம் 13.8.15லிருந்து வேண்டி கொடுத்திருந்தார். மேற்படி மனுதாரரின் மனுவை ஏற்றுக்கொண்டு அவருக்கு வீதப்பட்டி மாற்றம் செய்யுமாறு கூறிய மேலதிகாரியின் அறிவுரையை ஏற்று அவருக்கு வீதப்பட்டி மாற்றம் கடந்த 27.10.2016 முதல் செய்யப்பட்டது. இது குறித்து நுகர்வோரிடமும் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது அவரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 5.5.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் அவரது கணவர் திரு. காலேப் யோசுவா அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. C. முஜீப் ரஹ்மான் உதவி பொறியாளர்/ஸ்ரீவைகுண்டம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. காலேப் யோசுவா அவர்கள் மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேலும், தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையையும் சமர்ப்பித்தார். அதிலுள்ள வாதங்களையும் கேட்புரையின்பொழுது சமர்ப்பித்தார். அதிலுள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) வீதப்பட்டி மாற்றம் கோரும் விண்ணப்பத்தை உதவி பொறியாளர் 20.8.2015 அன்று பெற்றுள்ளார் எனது வீதப்பட்டி மாற்ற விண்ணப்பம் நாள் 17.8.2015 என்பதை உதவி பொறியாளர் தனது அப்பீல் மனு 19/2017 ல் பக்கம் 5ல் பத் 15,16ல் ஒப்புக்கொண்டுள்ளார். மனுதாரர் 17.8.2015ல் மாற்றவேண்டி கொடுத்த விண்ணப்பம் மனுதாரரின் கணவர் பெயரில் உள்ள நிலுவைத்தொகையினை வசூல் செய்யும்பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நடவடிக்கைக்கு உதவி பொறியாளரின் அதிகாரவரம்பு மின் சட்ட விதிகளில் எங்குள்ளது ?

(ii) எனக்கு எந்தவிதமான தகவலும்/நோட்டீசும் எதுவும் இல்லாது உதவி பொறியாளரின் எழுதப்படாத சட்டத்தின் கீழ் தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி எனது மின்இணைப்பை துண்டித்துள்ளார். இதற்கு எழுதப்பட்டவிதி இருக்குமானால் அது எங்கே ?

(iii) உதவி பொறியாளர் தனது தூ.மி.ப.வ மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்ட நடவடிக்கை எண்.071/2016ல் பக்கம் 2ல் வாரியத்தின் தரப்பு பதில் முதல் பத்தியில் இந்த நிலுவைத்தொகை செலுத்தக்கோரி 14.3.2005ல் எனது கணவருக்கு கடிதம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது என்கிறார்.

(iv) இந்த குறைதீர்க்கும் மன்றத்தின் விசாரணை நாள் 4.1.2016 அன்று எனது கணவர் தான் ஒப்புதல் பெற்றுள்ளதாக கூறப்படும் கடிதத்தில் ஒரு போலியான கையெழுத்திடப்பட்டுள்ளதாக கூறினார். 14.3.2005 தேதியிட்ட அப்படி ஒரு கடிதம் அவருக்கு வழங்கப்படவே இல்லை என மறுத்தார் பின் அதை யார் பெற்றார் என்று கையெழுத்தை சரிபார்த்தபோது அது எனது கணவரது கையெழுத்து அல்ல என் வீட்டார் யாருடைய கையெழுத்தும் இல்லை என உறுதி செய்யப்பட்டு அது ஒரு போலியானது என அன்றே உறுதி செய்யப்பட்டது.

(v) உதவி பொறியாளரிடமிருந்து இந்த நிலுவைத்தொகை குறித்தான கடிதம் ஒன்றை 26.11.2013 அன்று எனது கணவர் பெற்றுள்ளார். இதற்கு எனது கணவர் 3.1.2014 அன்று பதில் எழுதி நிலுவைத்தொகைக்கான வாரிய கோரிக்கையை மறுத்து கோரப்பட்ட நிலுவைத்தொகை குறித்து விவரமான பட்டியல் ஒன்றைத் தரும்படி கேட்டு அதில் உயர்நீதிமன்ற நடவடிக்கை குறித்தும் எழுதியுள்ளார். ஆனால் வாரியம் இதுவரை எந்த விதமான பதிலும் கொடுக்கவில்லை.

(vi) திருவைகுண்டம் உதவி செயற்பொறியாளர் இந்த தொழில்கூடத்தை ஒரு காலகட்டத்தில் திடீர் ஆய்வு செய்தபோது இந்த யூனிட் SSI TINY SECTOR கீழ் இருந்தாலும் இந்த தொழிலுக்கு IIIA வீதப்பட்டி கொடுக்க முடியாது மாறாக அதிக மின்கட்டணத்தை கொண்ட IIIB தான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை எழுப்பினார். IIIA வீதப்பட்டி தொடக்கத்தில் கொடுத்தவர்களே 5 வருடங்கள் கழித்து அது தவறு என முடிவெடுத்தனர். இந்த சூழ்நிலையில் தவறு யாருடையது அதிகாரிகளுடையதா? அல்லது நுகர்வோர்களுடையதா உடனே செயற்பொறியாளர் தனது Proceedings dt.18.10.2000 வாயிலாக எனது கணவருக்கு வீதப்பட்டி IIIA கொடுக்கப்பட்டது முதல் (சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு) IIIB குரிய வித்தியாசம் கணக்கீடு செய்யப்பட்டு அதை அவர் செலுத்த வேண்டும் என்றார்.

(vii) எனது கணவர் வேறுவழியின்றி சென்னை உயர்நீதிமன்றம் சென்றார் அங்கு IIIA TO IIIB வித்தியாச கணக்கெடுப்பு தொகை வசூலுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது ஆனாலும் தடைஉத்தரவுக்கு பின் IIIB அனுமதிக்கப்பட்டது இதன்படி மறுமின்இணைப்பு 29.6.2001ல் கொடுக்கப்பட்டது. அடுத்து IIIB அமுலுக்கு வந்தது. இந்த வீதப்பட்டியலில் தொழில் செய்ய முடியாததால் தொழில் நிரந்தரமாக முடித்து வைக்கப்பட்டு மின் தொழில் செய்ய முடியாததால் தொழில் நிரந்தரமாக முடித்து வைக்கப்பட்டு மின்இணைப்பு 4.7.2001 அன்று நிரந்தரமாக துண்டிக்கப்பட்டது. உதவி பொறியாளர் தூ.மி.ப.வ. மன்ற நடவடிக்கை உத்தரவு எண்.171/21.1.2016ல் பக்கம் 2ல் மின்இணைப்பு எண்.பி900க்கு மின்கட்டணம் செலுத்தாததினால்

10.7.2001 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு 4.7.2005ல் நிரந்தரமாக கணக்கு முடிக்கப்பட்டது என்கிறார். கணக்கு நிரந்தரமாக ஏழாவது மாதம் முடிக்கப்பட்ட பின்பு 14.3.2005 அன்று மூன்றாவது மாதம் மீதி செலுத்த வேண்டிய தொகை எங்கிருந்து வந்தது ? அதாவது 14.3.2005ல் கணக்கீடு செய்யப்பட்ட தொகை 4.7.2005ல் செலுத்தி முடிக்கப்பட்டது என்பது தானே உண்மை.

(viii) இந்த வழக்கில் சென்னை மின்வாரிய சேர்மன், செயற்பொறியாளர் தூத்துக்குடி, இளநிலை பொறியாளர் திருவைகுண்டம் பிரதிவாதிகளாக இருந்தார்கள். இடைக்காலத்தடை உத்தரவு இந்த மூன்று அதிகாரிகளுக்கும் உயர்நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. நானும் 21.6.2001 அன்று இந்த நகலை இளநிலை பொறியாளருக்கு நேரில் கொடுத்து ஒப்புதல் பெற்றுள்ளேன். மறு மின்இணைப்பு 29.6.2001ல் கொடுக்கப்பட்டது. இந்த நீதிமன்ற தடை உத்தரவு நகலை பொறியாளர் நி.கிருஷ்ணகுமார், B.E. செயற்பொறியாளர்(பொ) தனது அலுவலகத்தில் பெறப்படவில்லை என சுமார் 15 ஆண்டுகளுக்குப்பிறகு கடிதம் எண்.வ.ஆ.கோ. கட்டு அ.278/2016 நாள்2/2016 (தேதி இல்லை) கூறுவது உள்நோக்கம் கொண்டது.

(ix) இந்த வழக்கை மேற்கொண்டு நடத்த வாரியத்திற்கு தக்க ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதால் இடைக்காலதடை உத்தரவு உறுதியானது வழக்கும் முடித்து வைக்கப்பட்டது. இனி இந்த வழக்குக்கான நடவடிக்கைகள் எதுவும் தேவையானால் மின்சார வாரியம் தங்களது அட்வகேட்டை அணுகி நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மனுதாரரை நிர்பந்தப்படுத்துவதற்கு நியாயமான முகாந்திரங்கள் எதுவும் இல்லை. எனது கணவருக்கு சாதகமான தீர்ப்பு என்பதால் அந்த உத்தரவு நகலைக் கொண்டு உடன் நிவாரணத்திற்காக வாரியத்தை அணுகினார். அதன்பின்பு வாரியத்திற்கு சாதகமான தீர்ப்பு ஒன்று இருக்குமானால் அதைக்கொண்டு அவர்கள் தானே என் கணவரை அணுகுவது முறை.

(x) முடிந்த ஒரு வழக்கின் விவரங்களை முற்றிலும் அறியாது, அதற்கு உயிர்கொடுத்து அந்த நிலுவைத்தொகையை மீண்டும் கோருவது ஒரு நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகும். மேலும், இந்த

அறியாமையை கொண்டு எனது வீட்டு மின்இணைப்பு 390–006–1420 துண்டிக்கப்பட்டு மறு இணைப்புத்தர மறுக்கப்பட்டு பின் இடைப்பட்ட காலத்திற்குரிய மின் நிலுவைத்தொகையை தண்டனையுடன் சேர்த்து வசூல் செய்வது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

(xi) 17.8.2015 அன்று விதப்பட்டி மாற்றத்திற்கு கொடுத்த விண்ணப்பத்திற்கு உதவி பொறியாளர் 6.10.2016 அன்று சுமார் 14 மாதங்களுக்கு பிறகு 17.8.2015 வீதப்பட்டி மாற்றம் விண்ணப்பம் முறையான படிவத்தில் இல்லை ஆதலால் நான் முறையான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். என கேட்டுக் கொண்டார். கூடுதலான வீதப்பட்டியிலிருந்து குறைவான வீதப்பட்டிக்கு மாற்றம் குறித்து அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை ஆய்வு செய்ய 14 மாத காலமா ?

(xii) தூ.மி.ப.வ நடவடிக்கை எண்.122/31.1.2017 பக்கம் 2ல் உரிமம்தாரர் பதிலில் உதவி பொறியாளர் கூறுவதாவது, இதன்பின் வீதப்பட்டி மாற்றம் 18.10.2016 அன்று விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில் விண்ணப்பம் ஏற்கப்பட்டு மின்இணைப்பு ஆய்வு செய்ய சென்றபோது வீடு பூட்டி இருந்தது. பிறகு மனுதாரருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டு அதன் தொடர் நடவடிக்கையாக 27.10.2016 அன்று ஆய்வு செய்து உரியகட்டணம் வசூல் செய்யப்பட்டு வீதப்பட்டி மாற்றம் 27.10.2016 அன்று IAஆக மாற்றப்பட்டது. மேலும், தற்பொழுது 11/2016 மாதத்திற்குரிய மின்கட்டணம் செலுத்தாத காரணத்தினால் 9.12.2016 முதல் மின்இணைப்பு துண்டிப்பில் இருந்து வருகிறது என்றார்.

(xiii) நான் 18.10.2016ல் எனது வீதப்பட்டி மாற்றத்திற்கு மறு விண்ணப்பம் கொடுத்ததாகவும் அதன்பேரில் 27.10.2016 அன்று மறுமின்இணைப்பு கொடுத்ததாகவும் உதவி பொறியாளர் கூறியுள்ளார். இது அவரது துணிகரமான தவறான தகவல் ஆகும். நான் 7.2.2017 அன்று உதவி பொறியாளருக்கு 18.10.2016 அன்று நான் கொடுத்ததாக கூறப்படும் அந்த மனுவின் நகல் ஒன்றை கேட்டு அந்த கடித நகலை செயற்பொறியாளருக்கும் அனுப்பி வைத்தேன். இதற்கு பொறியாளர் திரு. நி. கிருஷ்ணகுமார் செயற்பொறியாளர்(பொ) அவர்கள் 16.2.2017 அன்று பதில்

கொடுத்தார்கள். அவர்கள் அதற்கு கூறும் பதிலில் தாங்கள் புகார் மனுவில் தெரிவித்தபடி கடந்த **18.10.2016** அன்று வீதப்பட்டி மாற்றம் தொடர்பாக அளித்த விண்ணப்பம் அலுவலக நடப்பில் பதிவுசெய்யப்பட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தாங்கள் அளித்த விண்ணப்பம் அலுவலக பதிவாகி விட்டது (official record) அலுவலக பதிவுகளை தனிநபர் சாதாரண மனுவில் கேட்டு அதனை வழங்க அலுவலக சட்டத்தில் வழிவகையில்லாத காரணத்தினால் தாங்கள் கேட்ட விண்ணப்ப நகலினை வழங்க இயலாது'' உதவி பொறியாளரும் செயற்பொறியாரும் எனது **18.10.2016** விண்ணப்பத்தை இந்த ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்ய வேண்டும்.

(xiv) தொடக்கத்தில் என் கணவர் மீதுள்ள பி**900** நிலுவைத்தொகையை கட்டினால் மறுமின்இணைப்பு தருவதாக கூறினார். இரண்டாவது மறுமின்இணைப்பு விண்ணப்பம் முறையான படிவத்தில் இல்லை என்றார். ஆதலால் விண்ணப்பத்தை முறையான படிவத்தில் தந்தால் மாத்திரமே மறுமின்இணைப்பு என்றார். மூன்றாவதாக நான் நிலுவைத்தொகை கோரிக்கையை செலுத்தவில்லை, முறையான விண்ணப்பம் ஒன்றை கொடுக்கவும் இல்லை. அவர்களாகவே மறுமின் இணைப்பை (தவறாக மின்பட்டியல் மாற்றம் என்பதற்கு பதிலாக முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்) **13–08–2015**க்கு பதிலாக **27.10.2016** முதல் கொடுத்துள்ளார்கள்.

(xv) உதவி பொறியாளர் **27.10.2016** முதல் எனது வீதப்பட்டி Vலிருந்து IAக்கு மாற்றப்பட்டது என்கிறார். அப்படியானால் அதன்பின் நான் ஏன் **100** யூனிட்டுக்கு குறைவான மின்கணக்கீடுக்கு கட்டணம் செலுத்த வேண்டும் ? நான் நவம்பர் மாத மின்கட்டணத்தை செலுத்த வேண்டும் என்ற நிர்பந்தத்தில் மீண்டும் **9.12.2016** முதல் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு அது இதுவரை தொடர்ந்து வருகிறது.

(xvi) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பி. சண்முகம் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு நாள் **15.6.2001** நகல் செயற்பொறியாளர் Rural TNEB தூத்துக்குடிக்கு உயர்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தும் அது அவரது அலுவலகத்தில் பெறப்படவில்லை

என்ற குற்றச்சாட்டு விசாரிக்கப்படவேண்டும். தவறான தகவலுக்கு அவர் தண்டிக்கப்படவேண்டும். இந்த பிரச்சனைக்கு முக்கிய காரணமே நீதிமன்றத்தினால் தடை செய்யப்பட்ட நிலுவைத்தொகையை மீண்டும் கேட்பதாகும்.

(xvii) மின்வினியோக பணிகளை கண்காணிக்கும் பொறியாளரே மின்குறைதீர்க்கும் மன்ற தலைவராக இருப்பதால் அவர் ஒருதலை பட்சமாக செயல்பட்டார் அதிகாரிகள் மீது தவறு இருந்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆதலால் தூ.மி.ப.வ. மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்ட நடவடிக்கைகள் 71/21.2.2016 மற்றும் 122/3.2.2017 சட்டப்படி முற்றிலும் செல்லாது என அறிவிக்கப்படவேண்டும் இந்த மன்றத்தின் குறைபாடுகளை எனது கடிதம் 12.1.2017ல் சுட்டிக்காட்டி மேற்பார்வை பொறியாளர்/தலைவருக்கு எழுதி தங்கள் சமூகத்திற்கு நகல் அனுப்பி உள்ளேன்.

(xviii) நான் மின்சார வாரிய அதிகாரிகள் அதிகார துஷ்பிரயோகம் என்று கூறியிருப்பதால் அதிகாரிகள் மின்வாரிய சட்ட விதிகளின்படி நடந்திருந்தால் அது மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட வேண்டும். இந்த சட்டவிதியின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என உறுதி செய்யப்படவேண்டும். சட்டத்தை சுட்டிகாட்டி தானே மனுதாரர்மீது நடவடிக்கைஎடுக்க வேண்டும். பொறியாளர்களின் பணி கவனக்குறைவினால் உண்டாகும் விபரீதங்களுக்கு மனுதாரர் பொறுப்பு அல்ல.

(xix) எந்தவிதமான நிபந்தனையும் இன்றி மறுமின்இணைப்பு 390–006–1420க்கு வழங்கிட உத்திரவிடவேண்டும்.

7.3 மேலும், 20.5.2017 நாளிட்ட எழுத்துப்பூர்வமான கூடுதல் வாக்குமூலத்தில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) இரண்டாவது ஆவணத்தின் அடக்கத்தை நான் பார்த்தபொழுது நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கொடுத்த 14.11.2015 தேதியிட்ட மனுவிற்கு விளக்கமாயிருந்தது.

14.11.2015 தேதியிட்ட மனுவிற்கு 12.11.2015 அன்று செயற்பொறியாளர் கையொப்பமிட்ட விளக்கவுரை எப்படி வந்தது? இப்படியொரு தபாலை நான் செயற்பொறியாளரிடமிருந்து பெற்றதற்கான பதிவு என்னிடமில்லை.

(ii) மூன்றாவது கொடுக்கப்பட்ட 9.11.2016 தேதியிட்டு எனது முகவரியைக் கொண்ட இரு ஆவணங்களுக்கும் என்னிடம் பதிவு கிடையாது. உதவி பொறியாளர் தனக்கு சாதகமாக ஒரு ஆவணத்தை உருவாக்கி அதை பதிவு செய்து தன் அலுவலகத்தில் வைத்துக் கொண்டுள்ளார். என்பதே உண்மை.

(iii) எட்டாவதாக கொடுக்கப்பட்டிருந்த ஆவணம் 15.9.2015 என தேதியிடப்பட்டிருந்தது. அதன் அடக்கம் கதவு மூடப்பட்டிருந்தது என்பதாகும். இது சம்பந்தமாக எனக்கு எந்தவிதமான தகவல்/நோட்டீஸ் எதுவும் கொடுக்கப்படவில்லை. 12.8.2015ல் வாரியத்தை சேர்ந்த திரு. பெருமாள் மின் உபயோக அளவை எடுத்துக் சென்றார். அதன்பின் அதுகணக்கீடு செய்யப்பட்டு உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் தங்கள் மின்கணக்கீட்டுத் தொகையை செலுத்தி முடித்தார்கள். அப்போது திரு. பொருமாள் அவர்களிடம் வாய்மொழியாக எனது வீட்டுச்சாவி பக்கத்து வீடு திரு. சுந்தரம் அவர்களிடம் உள்ளது, தேவைப்படும் போது வாங்கி கொள்ளலாம் என கூறப்பட்டது. மேலும், 9.2.2016ல் பணம் செலுத்த சென்ற போது எனது வீட்டு சாவி பக்கத்து வீட்டில் உள்ளது என எழுத்துப்பூர்வமாகவும் கொடுத்தேன். ஒருமுறை உதவி பொறியாளர் எனக்கு போன் செய்து சாவி கேட்டபோது அது பக்கத்து வீட்டில் இருக்கிறது என்று கூறினேன். அவர் அதை பெற்றார். ஆதலால் கதவு பூட்டப்பட்டிருந்தது என்ற குற்றச்சாட்டு நியாயமற்றது. தங்கள் தவறுகளை மறைக்க கூறப்பட்டுள்ள போக்குதான் இந்த கதவு பூட்டப்பட்டிருந்தது. என்ற குற்றச்சாட்டு.

(iv) மேலும், உதவி மின்பொறியாளர் இணைத்துள்ள 15.9.2015 தேதியிட்ட Door locked register, sheet No.60ஐ கவனிக்கும்போது விலாசம் 35/2 தெற்கு முத்தாரம்மன் கோயில் தெரு, என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், எனது வீட்டு எண்.55, மின்கணக்கீடு 12.8.2015ல் செய்யப்பட்டு

கட்டணம் செலுத்தப்பட்டு 13.8.2015 முதல் வீதப்பட்டி IAக்கு மாற்றம் கேட்கப்பட்டது. இந்நிலையில் 15.9.2015ல் வீடு பூட்டப்பட்டிருந்தது. ஆதலால் கணக்கீடு செய்ய முடியவில்லை என்பது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டு.

## 8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரரான உதவி பொறியாளர்/நகர்/ஸ்ரீவைகுண்டம் அவர்கள் தனது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினர்.

8.2 உதவி பொறியாளர், மேல்முறையீட்டாளரின் கணவர் பெயரிலுள்ள நிலுவைத்தொகையை கட்டவில்லை என்பதால் தான் பட்டியல் மாற்றம் செய்யப்படவில்லை என்று வாதிட்டார்.

8.3 மேலும், 20.11.2015ல் மின்துண்டிப்பு செய்தமைக்கு காரணம் மின் அளவீடு எடுக்க முடியாமல் வீடு பூட்டியிருந்தது என்றும் 9.12.2016ல் ஏற்பட்ட மின்துண்டிப்பிற்கு காரணம் 11/2016ற்கான மின்கட்டணம் கட்டாமல் இருந்தது என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், மேல்முறையீட்டாளர் 14.10.2016 நாளிட்ட கடிதத்தின்படி 27.10.2016ல் மின்இணைப்பின் மின்கட்டண விகிதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஐந்து கோரிக்கைகளை மேல்முறையீட்டில் சமர்ப்பித்துள்ளார். அவரின் கோரிக்கைகளுக்கு கோரிக்கை வாரியாக தீர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>

10.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய கோரிக்கையில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவு எண்கள் 71 நாள் 21.1.2016 மற்றும் 121 நாள் 3.2.2017 இரண்டையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

10.2 மேற்கண்ட ஆணைகளில் 71 நாள் 21.1.2016 நாளிட்ட ஆணையை பெற்ற பின்பு சுமார் ஒருவருடம் கழித்துதான் இந்தமேல்முறையீட்டை சமர்ப்பித்துள்ளார். மேலும், அவருடைய மற்றைய கோரிக்கைகள் மன்றத்தின் 3.2.2017 நாளிட்ட ஆணையை பற்றியது.

10.3 மன்றத்தின் 21.1.2016 நாளிட்ட ஆணை அவரின் மின்இணைப்பு துண்டிப்பில் இருந்த பொழுது மறு மின் இணைப்பு வழங்குவதற்கு அவரின் கணவரின் பெயரில் இருந்த மின்இணைப்பு எண். B900ல் உள்ள நிலுவைத்தொகையும் சேர்த்து செலுத்தவேண்டும் என்பது பற்றிய முறையீடு. ஆனால், அவரின் கணவரின் மின்இணைப்பிலுள்ள நிலுவைத்தொகையை தவிர்த்து மற்ற நிலுவைத்தொகையையும் கட்டணங்களையும் பெற்றுக்கொண்டு மின்இணைப்பை மறு இணைப்பு செய்ய மன்றம் உத்தரவிட்டுள்ளது.

10.4 மேல்முறையீட்டாளரும் ரூ.1662/– செலுத்தி மறு மின்இணைப்பை பெற்றுள்ளார். ஆனால், அந்த மன்றத்தீர்விற்கு எந்த மேல்முறையீடும் உரிய காலத்திற்குள் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், அந்த கோரிக்கை அவருக்கு நிறைவேறிவிட்டது என்ற நிலையில் ஒரு வருடம் கழிந்த பின்பு அந்த ஆணையை ரத்து செய்யவேண்டும் என்று முறையீடுசெய்துள்ளார்.

10.5 மன்ற விதி 8ன் படி ஒரு மேல்முறையீடு மன்ற ஆணை பிறப்பிக்கப்ட்ட 30 நாட்களுக்குள் செய்யப்படவேண்டும். இங்கு ஒரு வருடம் கழித்து தாமதமாக முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அதிலுள்ள கோரிக்கை தற்பொழுது இல்லை என்ற நிலையில் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவு எண்.71 நாள் 21.1.2016ஐ ரத்து செய்ய வேண்டும் என்பதை தீர்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>கோரிக்கை இரண்டு மற்றும் மூன்றிற்கான தீர்வு</u>

11.1 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.390–006–1420ன் வீதப்பட்டியை 13.8.2015 முதல் IA என்ற விகிதப்படிக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றும் இதுவரை அவரிடம் அதிகமாக வசூலிக்கப்பட்ட மின்கட்டணத்தை திரும்ப வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். மேற்கண்ட கோரிக்கைளுக்கு ஆதாரமாக கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார்.

(i) ஒரு முனை மின்இணைப்பு எண்.390–006–1420 உள்ள அவரது மாடிப்பகுதியை அரசு கல்வித்துறை உதவி தொடக்க கல்வி அலுவலகத்திற்கு மாதவாடகைக்கு கொடுத்திருந்தார். மின்இணைப்பு திறனிலோ அல்லது அதன் தன்மையிலோ மாற்றம் இன்றி மின் விகிதப்பட்டி மட்டும் IAலிருந்து Vக்கு மாற்றப்பட்டு அலுவலகம் அவரின் பெயரில் மின்கட்டணத்தை செலுத்தி வந்தது.

(ii) மேற்கண்ட உதவி தொடக்க கல்வி அலுவலகம் 10.7.2015ல் வீட்டை காலி செய்துவிட்டு 12.8.2015 வரை மின்உபயோக கட்டணம் ரூ.1598/–ஐ 12.8.2015 அன்று செலுத்தியுள்ளார்கள்.

(iii) மேற்கண்ட நிலையில் 17.8.2015ல் உதவி பொறியாளர் விநியோகம்/நகரம் அவர்களுக்கு கடிதம் எழுதி அரசு அலுவலகம் அவரது குடியிருப்பு வீட்டிலிருந்து காலியாகி விட்டதால் அவரின் மின் இணைப்பு விகிதப்பட்டியை V லிருந்து மீண்டும் வீட்டு உபயோகத்திற்கு IAக்கு என்று மாற்றும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அரசு அலுவலகம் காலி செய்யப்பட்டுள்ளது என்பதற்கு அவர்களது கடிதம் 7.8.2015ன் நகல் மற்றும் மின்கட்டணம் கட்டிய ரசீது எண்.9175715 நாள் 12.8.15 நகல் மற்றும் விகிதப்பட்டி மாற்றத்திற்கான கடிதத்துடன் சமர்ப்பித்துள்ளதாக வாதிட்டுள்ளார். மேற்கண்ட கடிதம் 20.8.2015ல் பெறப்பட்டுள்ளதாக உதவி பொறியாளரின் ஒப்புகையில் உள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

(iv) அவரது கணவர் திருவைகுண்டம் 13.8.2015ல் உதவி பொறியாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்த பொழுது மும்முனை மின்இணைப்பு எண்.B900ல் உள்ள நிலுவைத்தொகையை ரூ.11079/–ஐ செலுத்தினால்தான் விகிதப்பட்டி மாற்றம் மற்றும் மீண்டும்

மின்இணைப்பு தரமுடியும் என்று தெரிவித்துள்ளார் ஆனால், மேற்கண்ட நிலுவைத்தொகையை கோர இடைக்கால தடை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. அந்த தகவல் 21.6.2001ல் உரிமம்தாரரின் அலுவலர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(v) மேலும், உதவிபொறியாளர் 6.10.2016ல் அவர் விகிதப்பட்டி மாற்றம் கோரிய மனு முறையான படிவத்தில் இல்லை என்று தெரிவித்து விண்ணப்பத்தை முறையானபடி விதத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று சுமார் 14 மாத காலங்கள் கழித்து தகவல் தெரிவித்துள்ளார்.

(vi) மேலும், அவர் எந்த மனுவும் சமர்ப்பிக்காத நிலையில் 27.10.2016 அன்று முதல் விகிதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்றம் அவரின் 18.10.2016 நாளிட்ட விண்ணப்பத்தின் பேரில் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு எந்த மனுவையும் தான் சமர்ப்பிக்கவில்லை என்று வாதிட்டுள்ளார்.

(vii) மேலும், 27.10.2016 அன்று மின்இணைப்பு IA என்ற விகிதப்பட்டிக்கு மாறிய பின்பு அவரின் வீட்டிற்கு 100 யூனிட்டுகளுக்கு மின்கட்டணம் இல்லை என்ற நிலையில் மீண்டும் மின்கட்டணம் செலுத்தவில்லை என்று எவ்வாறு 9.12.2016ல் மின் இணைப்பை துண்டிக்க முடியும் என்றும் வாதிட்டுள்ளார்.

11.2 எதிர்மனுதார கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) மனுதாரர் மின்இணைப்பு எண்.390–006–1420க்கு வீதப்பட்டி மாற்றம் வேண்டி விண்ணப்பம் அளித்த காலகட்டத்தில் அவரின் கணவர் பெயரில் இருந்த மின்இணைப்பு எண்.390–006–900 உண்டான நிலுவை தொகை இருந்த காரணத்தால் பட்டியல் மாற்றம் செய்யப்படவில்லை என்று வாதிட்டார்.

(ii) மேலும், மனுதாரரின் கணவர் காலேப் யோசுவா 14.10.2016 நாளிட்ட கடிதத்தில் வீதப்பட்டி மாற்றம் 13.8.2015லிருந்து வேண்டும் என்று மனு கொடுத்தார். மேற்படி மனுவை ஏற்றுக் கொண்டு

அவருக்கு வீதப்பட்டி மாற்றம் செய்யுமாறு கூறிய மேலதிகாரியின் அறிவுரையை ஏற்று அவருக்கு வீதப்பட்டி மாற்றம் 27.10.2016 முதல் செய்யப்பட்டது என்று வாதிட்டார்.

(iii) மின்நுகர்வோர் தங்களின் மின் இணைப்பினை வாரியப்பணியாளரால் அளவீடு செய்யப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு 20 நாட்களுக்குள் பணம் செலுத்தாவிடில் மறுநாளே மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்பது வாரிய விதியாகும். எனவே, மின்கட்டணம் கட்டவில்லை என்பதால் 9.12.2016ல் மின்துண்டிப்பு செய்யப்பட்டது என்று வாதிட்டார்.

(iv) 20.11.2015 அன்று செய்யப்பட்ட மின்துண்டிப்பு door lock என்று reading எடுக்க முடியாமையால் செய்யப்பட்டது என்று வாதிட்டுள்ளார். மேலும், அதற்கு notice கொடுக்கப்பட்டள்ளது என்றும் வாதிட்டுள்ளார். தன்னுடைய 12.5.2017 நாளிட்ட கடிதத்தில் 15.9.2015 நாளிட்ட கம்பியாளர் மூலமாக வழங்கப்பட்ட அறிவிப்பு மற்றும் Door lock register உள்ள பதிவு ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார்.

11.3 இது மின்கட்டண விகித மாற்றம் பற்றிய கோரிக்கை என்பதால் நான் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் சம்பந்தப்பட்ட விதி 9ஐ ஆராய விரும்புகிறேன்.

***"9. Change of Tariff***

*A consumer can utilize a service connection given to him for a purpose different from the purpose for which he originally obtained the service connection, only if the same tariff is applicable to the new purpose also. If a different tariff is applicable to the new purpose, the consumer shall apply to the Licensee before changing the purpose and a revised Test Report will be taken indicating the change in the tariff.*

*The Licensee shall effect change of tariff within seven days from the date of receipt of application from the consumer.*

*However no consumer shall be permitted to change the tariff of the service connection from any Low Tension Tariff (other than agriculture) to Low Tension Tariff for agriculture."*

**11.3** மேற்கண்ட விதி **9**ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நுகர்வோர் தன்னுடைய மின்இணைப்பை புதிய உபயோகத்திற்காக பயன்படுத்தும்பொழுது கட்டண விகிதத்தில் மாற்றம் இல்லையெனில் பெற்ற மின்இணைப்பை வேறு உபயோகத்திற்கும் பயன்படுத்தலாம். ஆனால், புதிய உபயோகத்திற்கு வேறு கட்டண வீதம் என்ற நிலையிருந்தால் பயன்பாட்டை மாற்றி கொள்வதற்கு முன்பே நுகர்வோர் உரிமம்தாரருக்கு உரிய விண்ணப்பம் தந்து கட்டணவீதத்தை மாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்றும் திருத்திய சோதனை அறிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிகிறது. மேலும், மேற்கண்ட கட்டண வீதமாற்றம் நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெற்ற ஏழு நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.4** மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **9**ஐ ஆராய விரும்புகிறேன்

***"9. Meter readings when there is changes in sanctioned demand etc.,***

*(1) Whenever there is change in the sanctioned demand, the change shall be effected, as far as possible, to coincide with the next meter reading. If , however, it is not possible so to do, the meter shall be reset and the maximum demand charges shall be billed proportionately for the respective periods.*

*(2) Whenever a tariff change is to be effected in a service connection, such change shall be effected only after obtaining a Revised Test Report (RTR) and the reading taken shall be conclusive proof of the [2][electricity consumed till the change of tariff."*

**11.5** மேற்கண்ட தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **9(2)**ன் படி மின்இணைப்பின் கட்டண வீதப்பட்டியலில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் அத்தகைய மாற்றங்களை திருத்திய சோதனை அறிக்கை பெற்ற பின்பே செய்ய வேண்டும். திருத்திய சோதனை அறிக்கைக்காக எடுக்கப்படும் மின்னளவே(reading) மின்கட்டண பட்டியல் மாற்றத்திற்கு முன்பு உபயோகமான மின்பயன்பாட்டளவு ஆகும்.

**11.6** மேற்கண்ட தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதித்தொகுப்பின் விதி **9** மற்றும் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **9(2)** ஆகிய

இரண்டையும் சேர்த்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் மின் உபயோகம் மாறும்பொழுது <u>சம்பந்தப்பட்ட மின்இணைப்பின் நுகர்வோர்</u> மின்கட்டண பட்டியல் மாற்றத்திற்கு உரிய விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விண்ணப்பத்தின் பேரில் திருத்திய சோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த சோதனை அறிக்கையில் அப்பொழுது உள்ள மின்னளவியின் ரீடிங் பதிவு செய்யப்படவேண்டும் என்றும் அந்த பதிவு செய்யப்பட்ட ரீடிங் வரை பழைய மின்கட்டண பட்டியல் படிதான் மின்கட்டணம் வசூல் செய்யப்படும் என்றும் திருத்திய சோதனை அறிக்கையில் மாற்றி அமைக்கப்பட்ட மின்கட்டண பட்டியல் விபரம் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

**11.7** இங்கு மேல்முறையீட்டாளர் மின்கட்டண பட்டியல் மாற்றம் சம்பந்தமாக **17.8.2015**ல் மனு செய்துள்ளேன் என்று வாதிட்டுள்ளார்.

**11.8** எதிர்மனுதாரரும் அந்த விண்ணப்பத்தை பெறப்படவில்லை என்று தெரிவிக்கவில்லை ஆனால், அவரின் கணவரின் பெயரில் உள்ள மின்இணைப்பில் உள்ள நிலுவையின் காரணமாக உடனே நடவடிக்கை எடுக்க வில்லை என்று தெரிவித்துள்ளார்.

**11.9** மேலும், விண்ணப்பம் உரிய படிவத்தில் இல்லை என்று **6.10.2016** நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**11.10** ஆனால், **21.1.2016** நாளிட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற உத்தரவில் B**900** மற்றும் Rs.**11049/–** நிலுவைத்தொகை வசூலிக்க நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு WMP NO.**12028** and **12030/2001** IN W.P **8467** and **8468** of **2001** வழங்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் உயர்நீதிமன்ற இறுதி தீர்வுக்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்து வாரிய விதிகளின்படி அந்த மின்இணைப்புகளின் மின்கட்டண நிலுவைத்தொகையை செலுத்தி மறு மின்இணைப்பு பெறுமாறு உத்தரவு இட்டுள்ளது. அதன்படி **B900** நிலுவைத்தொகை தவிர அந்த குறிப்பிட்ட மின்இணைப்பு எண்.**390–008–1420**ன்

நிலுவைத்தொகை பெற்றுக் கொண்டு மின்இணைப்பு எண்.390–006–1420 மறு மின்இணைப்பு பெறப்பட்டுள்ளது. எனவே, B900ல் உள்ள நிலுவைத்தொகையின் காரணமாக மின்கட்டண பட்டியல் மாற்றம் செய்ய முடியாது என்று காரணம் தற்பொழுது நிலைக்கதக்கது அல்ல.

11.11 மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 17.8.2015 நாளிட்ட மனுவை அளிக்கும் பொழுது அந்த மின்இணைப்பில் எந்த ஒரு நிலுவைத்தொகையும் இல்லை. ஏனெனில் 12.8.2015 அன்று Door lock என்பதால் 7/2015 கணக்கீடு காலத்திற்கான மின்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்த மின்கட்டணம் கட்ட வேண்டியது 9/2015 அதற்கு கெடு நாள் 12.10.2015 ஆகும்.

11.12 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் அவரின் 17.8.2015 நாளிட்ட மனு எதிர்மனுதாரரால் 20.8.2015 அன்று பெறப்பட்டுள்ளது என்பது அவரின் postal acknowledgment ன் படி உள்ளது என்று வாதிட்டுள்ளார். 20.8.2015 அன்று பெற்ற மனுவிற்கு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களின்படி 27.8.2015 க்குள் விகிதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஒருவேளை அளவீடு (reading) எடுக்க செல்லும் போது வீடு பூட்டியிருந்தால் மேல்முறையீட்டாளருக்கு உரிய கடிதம் எழுதி check reading எடுக்க முடியவில்லை என்ற காரணத்தால் விகிதப்பட்டி மாற்றம் செய்ய முடியவில்லை என்ற தகவலை தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. ஆனால், 15.9.2015 அன்று door lock notice கம்பியாளர் மூலமாக அனுப்பப்பட்டதாக ஒரு அறிவிப்பு உள்ளது. ஆனால், 21.9.2015ல் ரீடிங் (reading) எடுக்கப்பட்டு assessment status normal என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது reading 1220, பயன்பாடு 0 என்றும் ரூ.230/– கட்டணம் என்றும் 7/2015 ற்கு door lock என்று செலுத்தியதில் உள்ள அதிகமாக வசூல் செய்யப்பட்ட கட்டணத்தில் சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும், அடுத்த 11/2015 கணக்கீடு காலத்தில்தான் door lock என்று மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

11.14 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்கட்டண பட்டியல் மாற்றம் கோரி விண்ணப்பித்த பொழுது 7/2015 கணக்கீடு காலத்திற்கான மின்கட்டணம் தாமதமாக 12.8.2015ல் door lock

என்பதால் முந்தைய கணக்கீட்டு கால தொகை BPSC யுடன் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நிலுவைத்தொகை இல்லை. மேலும் ,மேல்முறையீட்டாளரின் கணவரின் பெயரில் உள்ள தொகையை செலுத்த 2013 அறிவிப்பிற்கு பிறகு அறிவிப்பு கொடுத்ததாக எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்கண்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் மின்பட்டியல் மாற்றம் உரிய நாளில் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. காரணம் எதுவும் தெரியப்படுத்தி அவரின் விண்ணப்பம் மறுக்கப்படவும் இல்லை. மேலும், எதிர்மனுதாரர் அது IAக்கு மாற்ற தகுதியற்றது என்றும் வாதிடவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.390–006–1420 விகிதப்பட்டியை tariff Vலிருந்து IAக்கு மாற்றாமல் இருந்தமைக்கு சரியான கரரணங்கள் எதுவும் இல்லை. மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதித்தொகுப்பின் விதி 9ன்படி மின்பட்டியல் மாற்றம் கோரும் விண்ணப்பத்திற்கு கட்டணவிகித மாற்றம் விண்ணப்பம் பெற்ற ஏழு நாட்களுக்குள் செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இங்கு 20.8.2015ல் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது என்று வாதிடப்படுகிறது. எதிர்மனுதாரரும் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் வேறு என்று வாதிடவில்லை என்பதால் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் பட்டியல் மாற்றம் செய்யப்படவேண்டும் என்று விதியுள்ளதால் மின் இணைப்பு எண்.390–006–1420ன் விகிதப்பட்டியை Vலிருந்து IAக்கு 27.8.2015 முதல் மாற்றியமைக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.15 அவ்வாறு மாற்றியமைக்கும்பொழுது அவரிடம் tariff Vல் வசூல் செய்யப்பட்ட தொகை அதிகமாக இருந்தால் அதை அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் அல்லது இனி வருங்கால மின்கட்டணத்தில் சரிசெய்யப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

11.16 இந்த மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு 11/2016 மின் கணக்கீடு காலத்திற்கு மின்கட்டணம் செலுத்தவில்லை என்பதால் மின்துண்டிப்பில் உள்ளது. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பு IA என்ற விகிதப்பட்டியில் உள்ளதால் 100 யூனிட்டுகள் இலவசம்

என்பதால் அவர் மின்கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை என்று வாதிட்டுள்ளார். எனவே, மறு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**11.17** ஏற்கனவே உள்ள பதிவுகளின்படி மேற்கண்ட மின்இணைப்பில் **27.10.2016** மின் கணக்கீடு பட்டியல் மாற்றத்திற்காக எடுக்கப்பட்ட அன்று check reading **1530** என்று உள்ளது. எனவே, விதிகளின்படி **1530** ரீடிங் வரை மேற்கண்ட மின்இணைப்பு விகிதப்பட்டி Vன்படி தான் மின்கட்டணம் செலுத்தப்படவேண்டும். எனவே, **11/2016** கணக்கீடு காலத்தில் (**12.9.2016** முதல் **14.11.2016** வரை) **12.9.2016** முதல் **26.10.2016** வரை Tarif Vலும் **27.10.2016** முதல் **14.11.2016** Tariff IAலும் மின்கட்டணம் கணக்கீடு செய்யப்படவேண்டும். மின்பயன்பாட்டை பொறுத்தவரையில் **1460** முதல் **1530** வரை **70** யூனிட்களுக்கு Tariff Vஎன் படி மின்கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும்.

**11.18** அதன்பிறகு அங்கு பயன்பாடும் இல்லை. ஆனால், இலவச மின்சாரம் **27.10.2016** முதல் **14.11.2016** வரையிலான காலங்களுக்கு விகிதாச்சாரமாக (proportionate) ஆக சுமார் **30** யூனிட்கள் உண்டு. ஆனால், பயன்பாடு இல்லை என்பதால் யூனிட் பயன்பாட்டிற்கான கட்டணம் இல்லை. ஆனால், **11/2016** கணக்கீடு காலத்தில் **12.9.2016** முதல் **26.10.2016** வரையிலான காலத்திற்கு tariff Vன் படி உரிய மின் கட்டணம் செலுத்த வேண்டும். அந்த காலத்திற்குரிய மின்கட்டணத்தை கட்டவில்லை என்பதால் **11/2016** மின்கட்டணம் செலுத்தப்படவில்லை என்று **9.12.2016**ல் ஏற்படுத்திய மின்துண்டிப்பு அப்பொழுது உள்ள நிலையில் (as on that day) சரி என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**11.19** ஆனால், தற்பொழுது பத்தி**11.14**ல் உள்ள தீர்வின்படி மேற்கண்ட மின்இணைப்பு IA என்ற tariff **27.8.2015** முதல் கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதால் **11/2016** கணக்கீடு காலத்திற்கு பயன்பாடு **100** யூனிட்டுகள் வரை மின்கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை. **11/2016** கணக்கீடு காலத்தின் பயன்பாடு **70** யூனிட்டுகள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே,

மின்கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை. எனவே, மேற்கண்ட மின்இணைப்பு மறு மின்இணைப்பு செய்யப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>கோரிக்கை நான்கு மற்றும் ஐந்திற்கான தீர்வு</u>

12.1 மேல்முறையீட்டாளர் திருவைகுண்டத்தில் அவரது வீடு பல மாதங்களாக உதவி பொறியாளரின் தவறான பாரபட்சமான நடவடிக்கையினால் இருளில் மூழ்கி கிடப்பதால் அவரால் அங்கு சென்று குடியேற முடியவில்லை , யாருக்கும் வாடகைக்கும் கொடுக்க முடியவில்லை. இதனால் பிரதி மாதம் ரூ.12000/– நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எனவே, 13.8.2015 முதல் பிரதிமாதம் நஷ்ட ஈடாக மின்வாரியம் அல்லது உதவி பொறியாளர் மாதம் ரூ.12000/– வீதம் இந்த மேல்முறையீட்டு மனு முடியும் வரை கொடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

12.2 மேற்கண்ட கோரிக்கை மன்றத்தின் முன்னால் வைக்கப்படவில்லை. மின்குறைதீர்ப்பாளர் ஒரு மேல் முறையீட்டை விசாரிக்கும் அலுவலர் என்பதால் மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்படாத கோரிக்கைகளை ஏற்று அதற்கான தீர்வு வழங்க முடியாது. எனவே, மேற்கண்ட கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.3 மேலும், அவரும் அவரின் கணவரும் சந்தித்து வரும் அனைத்து கொடுமைகளுக்கும் வீட்டு பராமரிப்புக்காக சேர்த்து வைக்கப்பட்ட பொருள்கள் காணாமல் போய் வருவதால் உண்டாகும் பொருளாதார நஷ்டங்களுக்கும் மனஉளைச்சலுக்காகவும் சரீர பாதிப்புகளுக்குகாகவும் மின்வாரியம் அல்லது உதவி பொறியாளர் பொறுப்பேற்று நஷ்ட ஈடாக ரூ.2,00,000/– கொடுக்க உத்தரவு இடவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

12.5 ஆனால், மேல்முறையீட்டாளரின் மன்றத்திற்கு சமர்ப்பித்த மனுவில் அவருடைய கோரிக்கை கீழ்கண்டவாறு உள்ளது. கடந்த ஆகஸ்ட் 2015 முதல் இதுவரை அனுபவித்துவரும் அனைத்து உபாதைகளுக்கும் அநீதிகளுக்கும் மனரீதியான உளைச்சல்களுக்கும்

வருத்தங்களுக்கும் திருவைகுண்டம் விநியோகம் நகர் உதவி பொறியாளர் தார்மீக பொறுப்பேற்று அதற்கு ஈடாக அவருக்கு ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**12.5** கோரிக்கை ஐந்தை பொறுத்தவரையில் தற்பொழுது மேல்முறையீட்டில் உள்ள கோரிக்கைளுக்கும் மன்றத்தில் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கும் கோரப்படும் தொகையில் வித்தியாசம் உள்ளது. கோரிக்கையிலும் சிறிது மாற்றம் உள்ளது.

**12.6** இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி **7(11)**ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"xxx xxx xxx*
*xxx xxx xxx*
*7(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**12.7** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**12.8** எனவே, ஆணையம் நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு

வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி முடியாது என்று தெரிகிறது.

12.9 இந்தவழக்கில் கோரப்பட்டுள்ள நஷ்டஈடு கோரிக்கை ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 13. முடிவுரை

13.1 மேற்கண்ட பத்தியிலுள்ள இரண்டாவது கோரிக்கைக்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.390–006–1420ன் மின்கணக்கீடு விகிதப்பட்டியலை (tariff) V-லிருந்து IA–க்கு 27.8.2015 முதல் மாற்றி அமைக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், 27.8.2015 முதல் IA என்ற விகிதப்பட்டியலின்படி உள்ள மின்கட்டணத்திற்கும் விகிதப்பட்டியல் Vல் மேல்முறையீட்டாளர் ஏற்கனவே 27.10.2016 வரை செலுத்தியுள்ள மின்கட்டணத்தில் அவரிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையை அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் அல்லது வரும் காலங்களில் உள்ள மின்கட்டணத்தில் சரி செய்ய வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

13.2 மேலும், அவரின் மின்இணைப்பு 27.8.2015 முதல் Tariff IAல் மின்கட்டணம் கணக்கீடு செய்யப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்பட்டுள்ளதால், 11/2016ல் அவரின் மின்இணைப்பில் அவர் மின்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டிய நிலை இல்லை என்பதால் அவரின் மின்இணைப்பை மறு மின்இணைப்பு செய்ய வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

13.2 அவரின் நஷ்டஈடு கோரிக்கை மின்பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றவில்லை என்பது சம்பந்தமானது அல்ல என்பதால் அவரின் நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.19/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ.தர்மராஜ்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. எப்சிபா கமலம் யோசுவா,
11/2, பெரியார் நகர் EB எதிரில்,
சென்னீர்குப்பம்,
பூவிருந்தவல்லி – அஞ்சல்,
சென்னை–600 056.

2) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
நகர்/ஸ்ரீ வைகுண்டம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
புதுக்குடி ஸ்ரீ வைகுண்டம்.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132 எட்டையபுரம் ரோடு, தூத்துக்குடி–1.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19ஹ, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.